STC.No. 22/2025
நாள் – 11.11.2025.
P.W.1 – (விமல் சின்னப்பன் )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

புகார்தாரருக்கும் எதிரிக்கும் எந்தவிதமான வரவு செலவு என்று எனக்கு தெரியும். வியாபார வரவு செலவு. புகார்தாரருக்கும் எதிரிக்கும் மீன் வியாபாரம் சம்மந்தமாக வரவு செலவு என்றால் ஆம். நான் எழுதியதாக சொல்லும் புரோநோட்டில் எத்தனை சதவீத வட்டி என்றால் 1 சதவீத வட்டி. பு.சா.ஆ.1 புரோநோட்டில் ஏற்கனவே ஒரு முத்திரை வில்லை ஒட்டப்பட்டு அது பிரித்தெடுக்கப்பட்டு மற்றொரு முத்திரை வில்லை ஒட்டப்பட்டதாக தெரிகிறது என்றால் சரியல்ல. அந்த முத்திரை வில்லைக்கு பின் ஒரு ரப்பர் ஸ்டாம்ப் அச்சு தெரிகிறது. நான் எழுதியதாக சொல்லும் புரோநோட்டு டிசம்பர் 2024 இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 13.01.2021 அன்று பணம் வாங்கினார் அப்போது எழுதப்பட்டது. பு.சா.ஆ.1 புரோநோட்டில் வேறுஒரு நபர் கையெழுத்து செய்தததால் அந்த முத்திரை வில்லை பிரிக்கப்பட்டுள்ளது என்றாலும் என் முன்னிலையில் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

மீன் வியாபாரத்திற்காக எழுதப்படாத புரோநோட்டு மற்றும் எழுதப்படாத காசோலை 5 ஆண்டுகளுக்கு முன் எதிரி புகார்தாரருக்கு கொடுத்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் எதிரியை முதன்முதலாக நீதிமன்றத்தில் வைத்து தான் பார்க்கிறேன் என்றாலும் அதற்கு முன் எதிரியை எனக்கு யாரென்று தெரியாது என்றாலும் சரியல்ல. பார்த்துள்ளேன்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.